[4th August 1966

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லாச் சர்க்கார் ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி கொடுக்கும்போது அரிஜன இலாக்காவில் பணியாற்றுகிற டெபுடி சேவக்குகளுக்கு மட்டும் கிராக்கிப்படி இல்லை, பிரயாணப்படி இல்லை என்று இல்லை இல்லை என்று சொல்லக் காரணம் என்ன ? விலைவாசி உயர்வு அவர்களை மட்டும் பாதிக்க வில்லையா ? ஆகவே உடனடியாக அவர்களுக்கும் கிராக்கிப்படி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் சேவா உணர்ச்சியின் அடிப் படையில் வந்துள்ளவர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களா ? அவர்களுக்கு மற்ற அரசாங்க ஊழியர் களுக்கு உள்ளதைப் போல ஒழுங்கு முறை விதிகள் பொருந்துமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் அரசாங்க முழு நேர ஊழியர்கள்தான். அவர்களும் அரசாங்க ஊழியர்களின் ஒழுங்கு முறை விதிகள் பொருந்தும்.

ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கு விடுதி

* 74 கேள்வி—திரு. ம. கமலநாதன் : கனம் உள்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கான தங்கும் விடுதி புதிதாகக் கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Reclamation of arid seashore lands

* 75 Q.—Sri V. Sankaran : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to reclaim arid seashore lands in the State and bring them under cultivation; and

(b) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய கடற்கரை மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளை ஆராய்வதற் காகத் தனிப் பணியாளர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. இத் தனிப் பணியாளர்கள், இக் கரையோரப் பகுதிகள் நெடுகிலும் வேளாண்மைக்குப் பயன்படாமல் கிடக்கும் நிலப் பகுதிகளில் மண் வள ஆய்வு உட்பட விரிவான ஆய்வுகள் நடத்தி மேற்படி நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாகச் செய்வதற்குரிய தக்க ஒழுங்கு நடவடிக்கைகளுடன் வரை படங்கள், மதிப்பீடுகள் இவற்றையும் தயாரிப்பார்கள்.